1990 ஏப்ரல் 12] *[டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]*

அவர்கள் குறிப்பிடுவதைப் போல இன்னும் ஏதேனும் குழந்தைகளுக்கு அது போன்று தொடர்ந்து நோய்கள் இருக்குமானால் நிச்சயமாக இந்த அரசு அதற்கான மருத்துவ வசதி அளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) மாமண்டூரில் ஏற்பட்ட வாகன விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சையும் நிவாரணமும் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு தலைவர் அவர்களே 9-4-1990 திங்கட்கிழமை அன்று மதுராந்தகம் தொகுதியைச் சேர்ந்து இருக்கிற மாமண்டூர் நகரில் தந்தைப் பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக கட்டப்படுகின்ற உணவு விடுதிக்கு செங்கல் ஏற்றிக் கொண்டு வந்த பெரியார் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த லாரியும், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த பஸ்ஸும் மோதிக் கொண்டதின் காரணமாக 3 பேர் மரணமடைந்தும், பலர் இன்றைக்கு மிகவும் பாதிக்கப்பட்டு பல்வேறு காயங்கள் அடைந்தும் சிகிச்சை பெற்றுக் கொண்டு வருகிறார்கள். அவர்களிலே ஒருவருடைய நிலைமையானது மிகவும் அதிகமான அளவிலே பாதிக்கப்பட்டு சென்னை மருத்துவமனைக்கு இன்று காலையிலே கொண்டு வருகின்ற சூழ்நிலை ஏற்பட்டு இருக்கின்றது. பாதிக்கப்பட்டவர்களுக்கு—தனியார் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக ஏதாவது பாதிப்பு ஏற்பட்டால் அவர்கள் உடனடியாக நிவாரணம் கொடுப்பது முறையாக இருந்து வருகிறது—அந்த இரண்டு பேருந்துகளுமே அரசு போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்தவைகளாக இருந்தும் அவர்களுக்கு நிவாரணப் பணம் கிடைக்கவில்லை. அரசாங்கம் அவர்களுக்கு உடனடியாக நிவாரணப் பணமும், தகுந்த சிகிச்சையும் அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உகம்சந்த் அவர்கள் சொல்லிய தகவல் எனக்கும் கிடைத்து இருக்கின்றது. மற்றப் பேருந்துகளுக்கு எல்லாம் எப்படி நிவாரண உதவியோ அல்லது மருத்துவ உதவியோ வழங்கப்படுமோ அதுபோல இந்த விபத்துக்கும் வழங்கப்படுவதற்குரிய உரிய நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. அறிவிப்பு.

சில அமைப்புகளுக்கான உறுப்பினர்களைத் தேர்வு செய்ய நியமனத்தாள்கள் அளிப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்துக்கு ஓர் உறுப்பினரும், தமிழ் நாடு அரசின் அநாதை இல்லங்கள் மற்றும் கருணை இல்லங்கள்

குழுவுக்கு இரு உறுப்பினர்களும், அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவுக்கு மூன்று உறுப்பினர்களும், தமிழ் நாடு நில மேம்பாடு வாரியத்துக்கான மூன்று உறுப்பினர்களும் தேர்ந்தெடுப்பதற்கான வேட்பாளர் நியமனத் தாள்கள் 19-4-1990 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாள ரிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டு வோர் செயலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். நியமனத் தாள்கள் 20-4-1990 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 21-4-1990 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம். நியமனத்தாள் தாக்கல் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப் பட வேண்டிய எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 23-4-1990 திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை பேரவை வளாகத்திலுள்ள குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

4. கவன ஈர்ப்பு.

(அ) காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கலைக் கல்லூரியில் தேர்வின் போது காப்பி அடித்த மாணவனைப் பிடித்த கண்காணிப்பாளர் தாக்கப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் எஸ். டி. உகம்சந்த், மா. சுந்தரதாஸ் ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''19-3-1990 அன்று காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில் நடந்த பல்கலைக் கழகத் தேர்வின்போது நடந்த முறைகேடுகளால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

19-3-1990 அன்று காலை காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கலைக் கல்லூரியில் நடந்த பல்கலைக் கழகத் தேர்வில் மாணவர் ஒருவர் தேர்வின்போது காப்பி அடித்திருக்கிறார். அதை அங்கி ருந்த அறைக் கண்காணிப்பாளர் (Hall Superintendent/Invigilator)